IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
OS.No.167/2021

DEPOSITION OF WITNESS – PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | தாலுகா | கள்ளிக்குடி |
| தகப்பனார் பெயர் | முத்துக்கிருஷ்ணன் | ஊர் | பெருமாள்பட்டி |
| தொழில் | விவசாயம் | மதம் | இந்து |
| வயது | 66 | | |

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 10.02.2026 in accordance with the provisions of Act XX141.**

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

1. என் தாத்தா பெயர் சங்கரபூச்சி ரெட்டியார் என்றால் சரிதான். வாதி தகப்பனார் எனது தகப்பனார் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 1953 ல் சங்கரபூச்சி ரெட்டியார் பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மக்கள் பதிவு பாகப்பிரிவினை மூலம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 228/5, 228/4 ல் எனது பெயரும், லிங்கப்பாண்டி பெயரும் தவறுதலாக பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். சர்வே எண்.

228/4 ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் வாதியின் தகப்பனார் முத்தையாரெட்டியாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று RDO விசாரணையில் தெரிவித்து பட்டாவை சரிசெய்து கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான்.

2. சர்வே எண். 228/5 ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 12 செண்டில் மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1953 பாக பிரிவினை பத்திரத்தில் வாதியின் தகப்பனாருக்கு 38 செண்டும், கிருஷ்ண ரெட்டியாருக்கு 37 செண்டும், எனது தகப்பனாருக்கு 37 செண்டும் பாகமாக பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பாகபிரிவினை செய்ததில் 07.05.2012ம் தேதி அன்று ஆவண எண். 3607/2012 எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 37 செண்டுக்கு பதிலாக கூடுதலாக 57 செண்டை லிங்கப்பாண்டி என்பவருக்கு பதிவு செய்து கொடுத்ததில் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரிதான்.

3. மேற்படி ஆவணம் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்து விசாரணை செய்யப்பட்டது என்றால் விசாரணை செய்யவில்லை. மேற்படி மனு விசாரணைக்கு நானும் ஆஜராகி மேற்படி ஆவணம் மோசடி என்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தை நாங்களே இரத்து செய்துவிட்டோம் என்றால் சரிதான்.

4. சர்வே எண். 228/5 ல் உள்ள சொத்து சம்பந்தமாக எங்களுக்குள் வெளியே பஞ்சாயத்து பேசவில்லை என்றால் சரிதான். கிருஷ்ண ரெட்டியாருக்கு பாத்தியப்பட்ட 37 செண்டினை அவரது வாரிசான நாச்சியார் அம்மாள் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

வாதியின் 38 செண்டை வாதி அனுபவம் செய்வதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் ஆட்சேபணை உள்ளது. வாதிக்குரிய சொத்தில்தான் வாதி உள்ளார் என்றும் எனது அனுபவத்தில் வாதி தலையிடுவதில்லை என்றால் வாதி அவரது சொத்தை எனக்கு எழுதிகொடுத்துவிட்டார்.

5. மேற்படி 38 செண்டு சம்பந்தமாக வாதி வகையறா எனக்கு ஆவணம் எழுதிகொடுத்துள்ளார்களா என்றால் எழுதிகொடுத்துள்ளார்கள். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண். 228/5 ல் வாதிக்கு 55 செண்டை எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 228/5 சம்பந்தமாக 37 செண்டு தவிர வேறு எந்த உரிமையும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 228/5 ல் 37 செண்டை தவிர வேறு உரிமை உண்டு சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் கூடுதலாக 57 செண்டு லிங்கப்பாண்டி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்பதை ஒப்புக்கொண்டால் வாதி தரப்பில் குற்றவியல் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் கூடுதலாக நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் சரியல்ல. நான் மோசடியாக லிங்கப்பாண்டிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் இரத்து செய்யப்பட்டது, வேறு எந்த ஆவணமும் பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6. வாதி ஆவணத்தை இரத்து செய்திருந்தால் நீதிமன்றத்தில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதியின் 38 செண்டில் எனக்கு எந்தவித உரிமை இல்லை என்றாலும் வாதிக்கு இடையூறு செய்வதால் அசல் வழக்கு தாக்கல் என்றால் சரியல்ல. எனது

முதல் சாட்சியத்திலும், எதிர்வழக்குரையிலும் கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல. 07.05.2012 ல் லிங்கப்பாண்டிக்கு எழுதிகொடுத்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரிதான். அதை சட்டப்படி இரத்து செய்துவிட்டேன். வாதியின் பாகத்தில் அனுபவத்தில் எந்தவித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்றாலும் அவர்களின் பாகத்தை அனுபவிப்பதற்கு எந்தவித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வழக்கும்படி கேட்டுக்கொள்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.10 11:02:40 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.